# ஈழத்தமிழ் மக்களின் எதிர்கால அரசியலும் புலம்பெயர் தமிழ் சமூகத்தின் முக்கியத்துவமும்

- வேல்ஸ் இல் இருந்து அருஷ்

சிறீலங்காவின் அரச தலைவருக்கான தேர்தல் முடிவுகள் கடந்த புதன்கிழமை (27) அதிகாலை வெளிவந்துள்ளது. மீண்டும் தற்போதைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவே அரச தலைவராகும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

மிக மேசமான வன்முறைகளுடன் நடைபெற்று முடிந்த இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் திட்டமிடப்பட்ட வன்முறைகள் மூலம் தடுக்கப்பட்டதுடன், பெருமளவான கள்ள வாக்குகளும் போடப்பட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளை முறியடித்த பின்னர் நடைபெற்ற முதலாவது தேர்தல் இது என அனைத்துல ஊடகங்கள் கூறிவந்த போதும், தேர்தல் தினத்தன்று யாழ்குடா நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களும், அச்சமடைந்த தமிழ் மக்கள் வீடுகளுக்குள் முடங்கிப்போனதும் வன்முறையாளர்கள் யார் என்பதை அனைத்துலக சமூகத்திற்கு எடுத்துக்காட்ட போதுமானது.

மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கரத்தை, கல்லுண்டாய் பகுதிகள் உட்பட ஏறத்தாள 13 இடங்களில் கைக்குண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வவுனியாவிலும் இரு இடங்களில் கைக்குண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சிறீலங்காவின் அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என கருதப்பட்ட போதும் வடக்கு – கிழக்கில் உள்ள 14 இலட்சம் தமிழ் வாக்காளர்களில் ஏறத்தாள 4 இலட்சம் மக்களே வாக்களித்துள்ளனர்.

யாழ்குடாநாட்டில் உள்ள 721,359 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 156,000 மக்களும், வன்னியில் உள்ள 266,975 வாக்காளர்களில் ஏறத்தாள 85,000 மக்களுமே வாக்களித்துள்ளனர்.

இருந்தபோதும், யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பொன்சேகா வெற்றிபெற்றுள்ளது தமிழ் தேசிய கூட்டமைப்பின் வழிகாட்லுக்கு தமிழ் மக்கள் கொடுத்த அங்கீகாரமாகவே நோக்கப்படுகின்றது.

கடந்த டிசம்பர் மாதம் 17 ஆம் நாள் வேட்புமனு தாக்கல் நிறைவுபெற்ற பின்னர் அதிகரித்த தேர்தல் வன்முறைகள் தேர்தலுக்கு முதல் நாள் (25) 900 ஆக உயர்ந்த போதே தேர்தல் முடிவுகள் மக்களின் எதிர்பார்ப்புக்களை போல் அமையப்போவதில்லை என்ற எதிர்பார்ப்புக்கள் எழுந்திருந்தன.

அதனை போலவே மகிந்த ராஜபக்ச இரண்டாவது தடவையாக பதவியேற்றுள்ளது மேற்குலகத்தின் நகர்வுகளுக்கு கடுமையான நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளதுடன், தமிழ் மக்களின் உள்ளூர் அரசியலிலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தவல்லது.

அதாவது அடுத்துவரும் ஆறு வருடங்களும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகள் மிகவும் ஒரு நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர்கொண்டுள்ளது.

இந்த நிலையில் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் தீர்க்வுக்கான அடுத்த நகர்வு என்பது அனைத்துலகத்தின் அழுத்தங்களின் ஊடாகவே மேற்கொள்ளப்பட முடியும், அதற்கான செயல்திட்டங்களை முன்நகர்த்த வேண்டிய மிகப்பெரும் பொறுப்பு புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் கைகளில் தான் உள்ளது.

எமது அரசியல் தீர்வு எது என்பதை அனைத்தலகத்தின் முன் வைக்கும் செயல்முறைத் திட்டத்தை புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் முன்னெடுத்து வருகின்றது. எமது மக்கள் 1977களில் ஆணை வழங்கிய அரசியல் தீர்வுத்திட்டத்தை வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பின் மூலம் ஜனநாயக வழிகளில் நாம் மீண்டும் உறுதிப்படுத்தி வருகின்றோம்.

கடந்த 23 மற்றும் 24 ஆம் நாட்களில் சுவிஸ்சர்லாந்து, ஜேர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் நடைபெற்ற இந்த வாக்கெடுப்புக்கள் பெரும் வெற்றிபெற்றுள்ளன. அந்த நாடுகளில் வாழ்ந்துவரும் ஈழத்தமிழ் மக்கள் 99 விகிதத்திற்கும் அதிகமாக விருப்பு வாக்குகளை அளித்துள்ளனர்.

இதுவரையில் ஆறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட இந்த வாக்கெடுப்புக்கள் பெரும் வெற்றியை கொடுத்துள்ளது. எதிர்வரும் 30 ஆம் நாள் பிரித்தனியாவில் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளதால் அங்கும் அதனை வெற்றிபெறச் செய்ய வேண்டிய கடமை பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்களுக்கு உண்டு.

கனடாவுக்கு அடுத்த நிலையில் அதிகளவு ஈழத்தமிழ் மக்கள் வாழும் தேசம் என்பதால் பிரித்தானியாவின் முடிவுகள் மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது.

சிறீலங்காவின் எதிர்கால அரசியலை பொறுத்தவரையில், புதிய சிறீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிராக என்ன நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றது என்பதற்கு முன்னர் சிங்கள தேசத்திற்குள் உருவாக்கப்பட்டுள்ள பிளவுகளை துடைத்தழிப்பதற்கே முதலில் முற்படும்.

அதற்கான முயற்சிகளை தேர்தல் முடிவுகள் வெளிவந்த மறுதினமே சிறீலங்கா அரசு மேற்கொண்டுவிட்டது. எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தங்கியிருந்த சினமன் லேக் ஆடம்பர விடுதியை இரண்டு கொம்பனி சிறப்பு படையினர் சுற்றிவளைத்துள்ளதுடன், பொன்செகாவை கைது செய்யும் நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

தேர்தலுக்கு பின்னரான வன்முறைகளும் தென்னிலங்கையில் அதிகரித்துள்ளது. பல இடங்களில் ஊரடங்குச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், பலர் கொல்லப்பட்டுமுள்ளனர். மியான்மார் நாட்டின் எதிர்க்கட்சி தலைவர் ஆங் சான் சூகி என்பவருக்கு ஏற்பட்ட நிலை ஜெனரல் பொன்சேகாவுக்கும் ஏற்படலாம் என நம்பப்படுகின்றது.

இவ்வாறான நிலை சிறீலங்காவில் ஏற்பட்டுள்ளது சிறீலங்காவிற்கும் மேற்குலகத்திற்கும் இடையிலான உறவுகளில் மேலும் விரிசல்களை ஏற்படுத்தும் என்பதுடன், சிறீலங்கா தொடர்பில் ஒரு காத்திரமான முடிவை மேற்கொள்ளும் நிலைக்கும் அவர்களை இட்டுச் செல்லலாம் என்ற எதிர்பார்ப்புக்களை தோற்றுவித்துள்ளது.



தமிழீழத்திற்கான வாக்களிப்பு

**அடுத்துவரும் ஆறு வருடங்களும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகள் மிகவும் ஒரு நெருக்கடியாக சூழ்நிலைகளை எதிர்கொண்டுள்ளது. இந்த நிலையில் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் தீர்க்வுக்கான அடுத்த நகர்வு என்பது அனைத்துலகத்தின் அழுத்தங்களின் ஊடாகவே மேற்கொள்ளப்பட முடியும்,**



சிறீலங்காவிற்கான வாக்களிப்பு

## தலைவரின் வீடு சுற்றுலாத் தலம்

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வல்வெட்டித்துறை வீடு தென்னிலங்கை சிங்களச் சுற்றுலாப் பயணிகளின் சுற்றுலாத்தளமாக மாறியுள்ளது. ஏ-9 வீதியினூடாக அதிகளவிலான தென்னிலங்கை சிங்கள சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் செல்கின்றனர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் பல இடங்களினை பார்வையிடுகின்றனர். இவர்கள் பார்வையிடும் இடங்களில் ஒன்றாக தற்போது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வாழ்ந்த வல்வெட்டித்துறை வீடும் மாறியுள்ளது. உடைந்த நிலையில் உள்ள பிரபாகரனின் வீட்டிற்கு முன்னாள் நின்று இவர்கள் படங்கள் எடுத்துக் கொள்கின்றனர். அத்துடன் பிரபாகரன் வீட்டு முற்றத்து மண்ணில் சிறிதளவை தம்முடன் எடுத்துச் செல்வதையும் காணக் கூடியதாகவிருக்கின்றது. கடந்த சில நாட்களாக இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் தங்குவதற்கு யாழ்ப்பாணத்தில் போதியளவு தங்குவிடுதிகள் இல்லையென கவலை வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை, இவர்கள் பயணம் செய்கின்ற ஏ-9 வீதி எங்கும் பௌத்த கோவில்களும் முளைவிட்டுள்ளன. தமிழ் மக்கள் கொட்டில்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில், ஏ-9 வீதியெங்கும் கற்களால் கட்டப்பட்ட பெருமளவான பௌத்த விகாரைகள் உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.